**தூய சேகரிப்புக்கான நட்டோத்தரவாதக் கடிதம்**

கம்பெனி பதிவில. PQ 27

20….,…………….மாதம்
……ஆந் தேதியன்று
கொழும்பில்

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

…………………………………….
…………………………………….
…………………………………….

அன்புள்ள ஐயா,

(உள்நாட்டுக் காசோலைகள், உள்நாட்டு வங்கி வரைவு, வெளிநாட்டுக் காசோலைகள், வெளிநாட்டு வரைவுகள், பயணிப்பவர் காசோலைகள், பணக்கட்டளைகள் மற்றும் அஞ்சற் கட்டளைகள் உட்பட ஆனால் அவற்றை வரையறுக்காமல்) என்னால் / எம்மால் முன்வைக்கப்பட்ட மாற்றுண்டியல்கள் அத்துடன் / அல்லது காசோலைகளை எனது / எமது கோரிக்கையின் பேரில் காலத்துக்குக் காலம் கொள்வனவு செய்வதற்கு / சேகரிப்பதற்கு நீர் உடன்படுவதைக் கவனத்திற்கொண்டு, ……………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………………………………….என்னும் முகவரியைச் சேர்ந்த
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
………………………………………………………… ஆகிய நான் / நாம் இந்நட்டோத்தரவாதத்தில் அடங்கியுள்ள கீழே குறிப்பிடப்பட்ட விதிப்புகள் அத்தகைய எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும் என இத்தால் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

(1) (இதனகத்துப்பின்னர் ''சொல்லப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்னால் / எம்மால் முன்வைக்கப்பட்ட உள்நாட்டுக் காசோலைகள், உள்நாட்டு வங்கி வரைவு, வெளிநாட்டுக் காசோலைகள்,

வெளிநாட்டு வரைவுகள், பயணிப்பவர் காசோலைகள், பணக்கட்டளைகள் மற்றும் அஞ்சற் கட்டளைகள் உட்பட ஆனால் அவற்றை வரையறுக்காமல் காலத்துக்குக் காலம் உம்மால் மாற்றுண்டியல்கள் கொள்வனவு செய்யப்படுதல் / சேகரிக்கப்படுதல் சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராக மற்றும் நீர் உறக்கூடிய அல்லது அடையக்கூடிய இழப்புக்கள், செலவுதொகைகள், சேதங்கள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக உமக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் உம்மைத் தீங்கேற்படாது வைத்திருப்பதற்கும் இத்தால் நான் / நாம் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

(2) (இதனகத்துப்பின்னர் ''உண்டியல்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சொல்லப்பட்ட உள்நாட்டு / வெளிநாட்டு உண்டியல்கள் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகள் (இதனகத்துப்பின்னர் ''மறுக்கப்பட்ட உண்டியல்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மோசடி அல்லது போலி புனைதல் உட்பட ஆனால் அவற்றை வரையறுக்காத ஏதேனும் காரணத்தின் காரணமாக ஏற்காமை மூலம் அல்லது கொடுப்பனவு செய்யப்படாமை மூலம் மறுக்கப்படுகின்றபட்சத்தில்,

(அ) அத்தகைய ஏற்றுக்கொள்ளப்படாமை, கொடுப்பனவு செய்யப்படாமை அல்லது ஏற்கப்படாமை பற்றி அறிவிக்கப்பட்டதன் மேல் உடனடியாக எனக்கு / எமக்கு அல்லது எமது சார்பில் எவரேனும் திறத்தவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது அவ்வுண்டியல் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட / சேகரிக்கப்பட்ட நேரத்தில் எனது / எமது கணக்குக்கு வரவுவைக்கப்பட்ட தொகையை அல்லது ஏற்றுக்கொள்ளப்படாமை, கொடுப்பனவு செய்யப்படாமை அல்லது ஏற்கப்படாமைத் தேதியில் உமது வங்கியில் நிலவுகின்ற செலாவணி வீதத்தில் அத்தகைய உண்டியலுக்குச் சமமான இலங்கை ரூபாவை, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அதனை, ஏற்றுக்கொள்ளப்படாமை, கொடுப்பனவு செய்யப்படாமை அல்லது ஏற்கப்படாமைத் தேதியிலிருந்து, இவற்றுள் எத்தேதி முந்தியதாகவுள்ளதோ அத்தேதியிலிருந்து உமது வங்கியினால் அதன் வழமையான தொழிலின்போது விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான அல்லது வீதங்களிலான வட்டியுடன் சேர்த்து இறுதித் தீர்த்துவைத்தல் வரை மற்றும் நிலவுகின்ற வீதங்களில் அத்தகைய வட்டியின் மீதான மொத்த விற்பனவு வரவு வரி

அல்லது அத்தகைய வேறு ஏற்புடையற்பாலதான வரி மற்றும் அத்தகைய ஏற்றுக்கொள்ளப்படாமை, கொடுப்பனவு செய்யப்படாமை அல்லது ஏற்கப்படாமையினால் ஏற்பட்ட அல்லது அது சம்பந்தமாக உள்ள வங்கியின் வழமையான தொழிலின் போது அதன் செலவுதொகைகள், செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் தரகுப் பணங்கள் எல்லாவற்றையும் (சட்டச் செலவுகளுட்பட) உமது அலுவலகத்தில் மீளச்செலுத்துவதற்கு நான் / நாம்* பொறுப்பேற்று என்னை / எம்மைக் கடப்பாடுடையவருமாக்குகின்றேன் / கடப்பாடுடையவர்களுமாக்குகின்றோம்; அத்துடன்

(ஆ) மேலே 1 மற்றும் 2(அ) இன்கீழ் அல்லது அவற்றின் பயனைக்கொண்டு உமக்கு வருமதியாகவுள்ள எலல்hத் தொகைகளையும் பணத்தொகைகளையும் உமது வங்கியில் உள்ள எனது / எமது கணக்கு / கணக்குகளுக்கு அத்தகைய கணக்கு / கணக்குகளிலிருந்து மிகையாக மீளப்பெறும் அளவு வரையிலும் கூட பற்றுவைப்பதற்கு உமக்கு இல்லாதொழிக்கமுடியாதவகையில் நான் / நாம் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம் என்பதுடன் எனது / எமது கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து மிகையாக மீளப்பெறுகின்ற பட்சத்தில், அத்தகைய உள்நாட்டு / வெளிநாட்டு உண்டியல் வங்கியின் விருப்பத்தெரிவில் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டவிடத்து / சேகரிக்கப்பட்டவிடத்து காலத்துக்குக்காலம் உமது வங்கி அதன் வழமையான தொழிலின்போது விதிப்பனவு செய்யக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் / வீதங்களில் அவற்றின் மீதான வட்டியுடனும் (வட்டியின்மீதான மொத்த விற்பனவு வரவு அத்துடன் / அல்லது அத்தகைய ஏற்புடையற்பாலதான வேறு வரி மற்றும் சட்டச் செலவுகள் உட்பட) அதனால் ஏற்பட்ட செலவுதொகைகள், செலவுகள் மற்றும் விதிப்பனவுகள் எல்லாவற்றுடனும் சேர்த்து கோரிக்கையின் மீது கொழும்பில் உள்ள வங்கியின் பதிசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது அதன் கிளை அலுவலகத்தில் மீளச்செலுத்துவதற்கும் நான் / நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

(3) சொல்லப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எனக்கான/ எமக்கான ஏதேனும் குறிப்பீடு இன்றி அல்லது என்னிலிருந்து / எம்மிலிருந்து மேலதிக அதிகாரவளிப்பு இன்றி எவையேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு

என்னால் / எம்மால் இல்லாதொழிக்கமுடியாத வகையில் உமக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என விளங்கிக்கொள்ளப்படுவதுடன், அத்தகைய எவையேனும் கொடுப்பனவுகள் உண்மையில் என்னிலிருந்து / எம்மிலிருந்து வருமதியாகவுள்ளதா அல்லது அல்லவா என அல்லது அத்தகைய எவையேனும் மாற்றுண்டியல்கள் அத்துடன் / அல்லது காசோலைகளின் செல்லுபடியான தன்மை அல்லது உண்மைத்தன்மை தொடர்பாக அல்லது எமக்கும் அத்தகைய மாற்றுண்டியல்கள் அத்துடன் / அல்லது காசோலைகளுக்கான வேறு திறத்தவர்கள் எவருக்கும் இடையில் ஏதேனும் பிணக்கு உள்ளதா அல்லது இல்லையா என நீர் விசாரணை செய்வது கடமையாதல் ஆகாது அத்துடன் அத்தகைய ஏதேனும் கொடுப்பனவை நீர் பயனுறுத்துவது தொடர்பில் உமக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு நான் / நாம் இத்தால் உடன்பட்டு பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

(4) எல்லா வெளிநாட்டு சாதனங்களும் அதியுச்ச முயற்சிகளின் அடிப்படையிலும் எமது தொடர்பு வங்கிகள் மூலமாக மட்டும் அத்துடன் அத்தகைய தொடர்பு வங்கிக்கு ஏற்புடையற்பாலனவான அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமையவும் சேகரிக்கப்படுதல் வேண்டும் என நாம் உடன்படுகின்றோம்.

(5) இதன்கண் அடங்கியுள்ள எதுவும், இதன்கண் குறிப்பிடப்பட்ட வசதிகளை எனக்கு / எமக்கு அளிப்பதற்கு உம்மீது ஏதேனும் கடப்பாடு உண்டு என உட்கிடையாகக் கூறுவதாகக் கருதப்படுதலாகாது எனவும் அவ்வசதிகளை அளித்தல் உமது தனித்தற்றுணிபில் இருத்தல் வேண்டும் எனவும் விளங்கிக்கொள்ளப்படுவதுடன் நான் / நாம் இத்தால் அதற்கு உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்

(6) இவ்வுடன்படிக்கை மற்றும் பொறுப்பேற்பு சொல்லப்பட்ட மாற்றுண்டியல்கள் உரியமுறையில் முன்வைக்கப்பட்டு ஏற்கப்படும்வரை எனக்கு / எமக்கு எதிராகவுள்ளவாறு முழுமையாக வழுவில் இருத்தல் வேண்டும் அத்துடன் / அல்லது இதன்கீழான எனது / எமது எல்லாக் கடப்பாடுகளும் உமது முழுத்திருப்திக்கு நிறைவேற்றப்படுவதுடன் இணங்கியொழுகவும்படுகின்றது அத்துடன் இவ்வுடன்படிக்கை உம்மால் எழுத்தில் இரத்துச்செய்யப்படுகின்றது.

(7) எனது / எமது முன்னங்கீகாரத்தைப் பெறாமல் வங்கியானது இதன்கீழான அதன் எவையேனும் உரிமைகளை அல்லது எல்லாவற்றையும் வேறொரு திறத்தவருக்கு குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் நான் / நாம் ஒப்புக்கொள்கின்றேன் / ஒப்புக்கொள்கின்றோம்.

(8) இக்கடிதத்தின்மூலம் என்னை / எம்மை, எனது / எமது மரபுரிமையாளர்களை, நிறைவேற்றுநர்களை, நிருவாகிகளை மற்றும் உரித்தில் அடுத்துறுநர்களை மற்றும் சாட்டுநர்களை பிணிப்பதற்கு நான் / நாம் இத்தால் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

தங்கள் விசுவாசமுள்ள,

………………………

………………………

வாடிக்கையாளரின் (வாடிக்கையாளர்களின்) கையொப்பம்

**குறிப்பு:-**

1. ஏற்புடையதல்லாதவற்றை நீக்கிவிடவும்.
2. பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில், கம்பெனி இலச்சினை இடப்பட்டு உரியமுறையில் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.
3. எல்லா நீக்கிவிடுகைகளும் / உள்ளீடுகளும் உரியமுறையில் முதலெலுத்தொப்பமிடப்படுதல் வேண்டும்.